<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

OS.No. 173/2012 Date: 15.07.2025

PW2- சின்னமணி

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

எனக்கு வாதி. பிரதிவாதிகளை தெரியும். தாவா சொத்து ஆதியில் பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. செங்கோடனுக்கு ¼ பாகமும், சரசா வகையறாவுக்கு ¼ பாகமும், ருக்குமணி வகையறாவுக்கு ½ பாகமும் பாத்தியம். அவர்கள் தனித்தனியாக ஓட்டி வருகிறார்கள் என்றால், சரிதான். ஆனால் பாகம் பிரிக்கப்படவில்லை. தாவா சொத்தை ஒட்டி தென்வடல் மெயின் ரோடு உள்ளது. அதன் மேல்புறம் தாவா சொத்து உள்ளது. சொத்தின் நடுவில் கிணறு உள்ளது. வடபுறம் உள்ள நிலத்தில் பழனி, ருக்மணி அஸ்திவாரம் போட்டுள்ளார்கள். தென்புறமுள்ள பெரிய இடத்தில் சின்னமணி, சத்தியராஜ், சரவணன் ஆகியோர்கள் வீடு கட்டியுள்ளார்கள். அந்த இடம் அவர்களுக்கு பாகம் வந்த இடமா அல்லது பொது இடமா என்றால், பாகத்தில்தான் வந்தது. அதேபோல் விவசாய நிலமும் நீதிமன்றம் மூலம் அளந்து பங்கு பிரித்தார்களா என்று எனக்கு தெரியாது. அந்த நீதிமன்ற தீர்ப்பின்படிதான் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்து ஏற்கனவே பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்றால், சரியல்ல. பொதுவில் உள்ளதா நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. தாவா சொத்தை ஏற்கனவே பாகம் பிரித்தபடிதான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், அது எனக்கு தெரியும் என்றாலும், தற்போது தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் வாதிகள் சொல்லி கொடுதது அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

ஒப்பம்/-சின்னமணி

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.